கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 2009/2010
(ஜனவரி/பெப்ரவரி 2013) (வெளிவாரி)

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

# SOC 201 Social Research methods

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. "அறிவுலக வளர்ச்சிக்கு ஆய்வுகள் அடிப்படை" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

(20 புள்ளிகள்)

02. சமூக யதார்த்தங்களை வெளிக்கொணர்வதில் சமூக ஆய்வுகள் செயற்படுமாற்றினை அதன் முக்கியத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக?

(20 புள்ளிகள்)

03. ஆய்வின் அடிப்படைத் தத்துவங்களுள் நம்பகத்தன்மை (Reliability) பின்பற்றப்பட வேண்டியதற்கான காரணங்களைத் தகுந்த உதாரணங்கள் கொண்டு தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

04. ஆய்வு முன்மொழிவில் (Research Proposal) உள்ளடங்க வேண்டிய விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

05. மாறிகள் (Varriables) ஆய்வுச் செயற்பாடுகளில் பெறும் முக்கியத்துவத்தினை உதாரணங்களுடன் விபரிக்குக?

(20 புள்ளிகள்)

06. "ஆய்வு வினாக்கள் (Research Questions) ஆய்வுச் செயற்பாட்டை வழிநடாத்துகின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

07. குழுநிலைப் பேட்டி (Focus Group interview) மூலம் பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பப்படுகின்றது. ஏற்றுக்கொள்கின்றீரா நியாயப்படுத்துக?

(20 புள்ளிகள்)

08. ஏதாவது நான்கிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(அ) உறுதிப்படுத்தும் தன்மை (Validity)

(ஆ) ஆய்வில் அறம் (Ethics in Research )

(இ) மாதிரி முறையில் பனிப்பந்து மாதிரி (Snowball Sample)

(ஈ) கருதுகோள் (Hypothesis)

(உ) பண்பு ரீதியான ஆய்வுகள் (Qualitative Research)

(20 புள்ளிகள்)